10/=

பக்கங்கள் 06

எதிரொலி
Ethiroli

21 திங்கட்கிழமை ஜூன் 05 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

# இரு அமைச்சுகள் மீண்டும் மாற்றம்?

மீண்டும் இரு அமைச்சுகளில் மாற்றம் ஏற்படவுள்ளன என நம்பத் தகுந்த வட்டா ரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

பைசர் முஸ்தபா வகிக்கும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மஹிந்த அமரவீரவுக்கும், மஹிந்த அமரவீர வகிக்கும் கடற்றொழில் நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சு பைசர் முஸ்தபாவுக்கும் வழங்கப்படவுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர் பான முக்கிய அறிவிப்பு இன்னும் சில நாள்களில் வெளியாகும் என எதிர்பார்க் கப்படும் நிலையில் அந்த அமைச்சில் மாற்றங்கள் ஏற்படவுள்ளமை குறிப் பிடத்தக்கது.



# விக்னேஸ்வரனை கைது செய்க!

## ஞானசார தேரர் கூவல்

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா, அமைச்சர் றிஷாட் பதியுதீன் ஆகியோரைக் கைது செய்துவிட்டு, பின்னர் என்னைக் கைது செய்யுங்கள்" என்று கூவியுள்ளார் ஞானசார தேரர்.

நான் யாருக்கும் பயந்தவனல்ல. எனினும் நான் எந்தத் தவறையும் செய்யவில்லை. பௌத்தத்துக்காக குரல் எழுப்பினேன். அதற்காக என் மீது களங்கம் சுமத்தியுள்ளனர். அப்படிப் பார்த்தால் வடக்கு முதல்வர் விக்னேஸ் வரன், விஜயகலா, றிஷாட் போன் றோரையும் கைது செய்யவேண்டும். அவர்களும் இப்படி இனவாத, மதவாதக் கருத்துக்களை முன்வைக்கிறார்கள். நேர்மையான அரசாக இருந்தால் அவர்க ளைப் பிடித்துவிட்டு என்னைப் பிடியுங் கள். இது என் போராட்டத்தின் கடைசி யாக இருக்கலாம். என் உயிர் கூட போகலாம். ஆனாலும் நான் அஞ்ச மாட் டேன்" என்று அவர் வீடியோக் காட்சி மூலம் கருத்து வெளியிட்டுள்ளார்.(அ)



## மீளத் திறந்த பாடசாலைகள்

சீரற்ற காலநிலையால், தற்காலிகமாக மூடப்பட்டிருந்த சகல பாட சாலைகளும் இன்று மீண்டும் திறக்கப் பட்டன.எனினும் மண்சரிவு, வெள்ளப் பெருக்கு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பாதிப்படைந்த மற்றும் அகதி முகாம்களாக உள்ள 54 பாடசாலைகள் இன்று திங்கட்கிழமை திறக்கப்பட வில்லை எனவும் விரைவில் அவற்றையும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்வியமைச்சு அறிவித் துள்ளது. (அ)

# பேஸ்புக் பேச்சு போயே போச்சு

## பாய்கிறது சட்டம்

சமூக வலைத்தளங்கள் ஊடாக இனவாதத்தைப் பரப்புவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து நாட்டின் அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கு இடையில் அதிகரிக்கும் முரண்பாடுகளுக்கு - குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிரான சம்பவங்களுக்கு சமூகவலைத்தளங்களே தூபமிடுகின்றன என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (எ)

## கருத்து வேறுபாடு

தென்னிலங் கையில் அண்மை யில் ஏற்பட்ட வெள்ளத்துக்கு தெற்கு அதிவேக நெடுஞ்சாலையே காரணம் என அமைச்சர் சம் பிக்க ரணவக்க கருத்துத் தெரிவித் திருந்தார்.

இந்தக் கருத்தை உள் 06

## காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம்
## 22 இல் நாடாளுமன்றில் கலந்துரையாடல்

காணாமல் ஆக்கப்பட் டோர் அலுவலகம் அமைப் பது தொடர்பான கலந்துரை யாடல் ஒன்று எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்றில் இடம்பெறும் என அமைச்சர் மனோ கணேசன் இன்று தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட் டோருக்கான அலுவலகம் அமைக்க கடந்த வருடம் மே மாதம் அமைச்சரவை அனு மதியளித்தது. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர் பில் உண்மைத் தகவல்களை உறவுகளிடம் சேகரிக்கவுள்ள தாக அரசாங்கம் அறிவித்தி ருந்தது. காணாமல் ஆக்கப்பட் டோர் அலுவலகம் தொடர் பில் நாடாளுமன்றில் கடந்த ஓகஸ்ட் மாதம் வாக்கெடுப்பு நடக்கவிருந்த போதும் அது நடக்கவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. (எ)

## சூட்டுக்கொலை

மட்டக்குளிய பிரதேசத்தில் இன்று நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் பலியானார்.

சுமார் 24 வயதுடைய இளைஞர் ஒருவரே இதன்போது கொல்லப்பட்டதாக பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். இந்தக் கொலைக்கான காரணம் தெரியவரவில்லை. (அ)

# நஞ்சுண்ட குமாரனுக்கு நெஞ்சதிர அஞ்சலி!





தமிழ் மக்களின் விடுதலைக்காக உயிர்நீத்த முதலாவது விடுதலைப் போராளியான பொன். சிவகுமாரனின் 43 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று நினைவுகூரப்பட்டது.

வடமாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் சி. தவராசாவின் ஏற்பாட்டில், யாழ்.உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள சிவகுமாரனின் உருவச்சிலை அமைந்துள்ள இடத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், சி.சிறீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், மாகாண சபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன், சிவாஜிலிங்கம், பரம்சோதி உட்பட பலர் பங்குபற்றி அஞ்சலி செலுத்தினர்.(அ)

## அமைச்சருக்கு வந்த வாழைப்பழச் சிக்கல்!

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட வாழைப்பழப் பொதிகளில் தனது புகைப்படம் பொறிக்கப்பட்டிருந்த தாக பேஸ்புக்கில் வெளியான புகைப்படம் தொடர்பில் அமைச்சர் கயந்த கருணாதிலக குற்றப் புலனாய்வு பிரிவில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

அமைச்சரைக் கிண்டலடிக்கும் 06

## போராளிகளுக்கு அழைப்பு!

"தமிழ் மக்களின் விடிவுக்காக ஆயுதம் தாங்கிப் போராடிய அனைவரும் ஆயுத கலாசாரமற்ற ஜனநாயகப் போராளிகளாக அணிதிரண்டு மக்களுக்குச் சேவை செய்ய எம்மோடு இணையுங்கள்"

இவ்வாறு ஜனநாயகப் போராளிகள் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.கிழக்கு மாகாணத்தில்-குறிப்பாக மட்டக்களப்பில்-இந்தக் கோரிக்கை அடங்கிய துண்டுப் பிரசுரங்களை ஜனநாயகப் போராளிகள் கட்சியைச் சேர்ந்தவர்கள் விநியோகித்து வருகின்றனர். 06

# உஷ்..!



படையினர் மற்றும் அரச அதி காரிகள் தொடர்பில் எவரும் விமர் சிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடுந்தொனி யில் தெரிவித்துள்ளார்.

"அரச அதிகாரிகள் மற்றும் முப் படை அதிகாரிகள், படையினர் தொடர் பில் ஊடகங்கள் தேவையற்ற விமர்ச னக் கருத்துக்களை வெளியிடுகின் றன. நாட்டில் அண்மையில் ஏற் பட்ட இடர்களின் போது மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதில் படையி னரும், அரச அதிகாரிகளும் முனைப் புடன் செயற்பட்டனர். எனவே ஊட கங்களும், அமைச்சர்களும் இந்த விடயத்தைக் கவனத் தில் கொண்டு, படையினரையும், அதிகாரி களை யும் விமர்சிப்பதை நிறுத்த வேண் டும்" எனக் கூறியுள்ளார். (அ-33)

# நல்லிணக்கம் ஏற்பட புதிய கற்கை நெறி



முரண்பாடுகள் மாற்றம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான புதிய கற்கை நெறி வரும் ஆண்டு தொடக்கம் பல்கலைக்கழகங்களில் பாடமாகிறது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான தேசிய ஒருமைப்பாடு மற்றும் நலலிணக்க அலுவலகம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் இணைந்து இந்தப் பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

மூன்று தசாப்தங்களாக நாட்டில் நீடித்த யுத்தம் நிறைவுக்கு வந்து 8 வருடங்கள் கடந்துள்ள போதும் நல்லிணக்கம் - சமாதானத்தை கட்டியெழுப்ப முடியவில்லை. இந்நிலையில் புதிதாக மதவாதம் தலையெடுத்து வருகின்றது.

இதயத்தின் ரணங்களைக் குணப்படுத்துவதன் மூலமே இதை சரி செய்யமுடியும். இளைஞர்களாலேயே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் இதனாலேயே பல்கலைக் கழகங்களில் இந்தப் பாடம் கற்பிக்கப் படவுள்ளதாகக் கூறுப்படுகிறது.

யாழ்ப்பாணம், கிழக்கு, ருகுணு, தென்கிழக்கு, சௌந்தர்ய கலா, இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகங்களிலும், சுவாமி விபுலானந்தா கல்வியகம், ஜாமியா நலீமியா நிறுவகத்திலும் முதற்கட்டமாக இப்பாடத்திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது.

## வரலாற்றுத் தொன்மை மிக்க
# பாஹியன்கல குகை இடியும் அபாயத்தில்



பாஹியன்கல மலைக்குகை இடிந்து விழும் அபாயத்தை எதிர்நோக்கி யுள்ளது. வரலாற்று சிறப்பு மிக்க இந்தக் குகையில் உலகிலேயே மிகப் பழைமையான எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டன.

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் இப்பகுதியில் ஏற்பட்ட மண்சரிவுகளாலேயே இந்தக் குகை இடியும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது.

அபாயநிலையை கருத்தில் கொண்டு மலைக் குகையின் விகாரை யில் தங்கியிருந்த 30 பிக்குகள், அண்மையாக வசித்த 21 குடும்பங்க ளும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

வரலாற்றுத் தொன்மை வாய்ந்த இந்தக் குகையைப் பாதுகாக்க தொல்லி யல்துறையினர் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

## பணப்பரிமாற்ற மோசடி இருவருக்கு மறியல்

ஈ-சற் பணப் பரிமாற்றம் மூலம் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவை மோசடி செய்த இருவரை புத்தளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாரின் இரகசிய நடவடிக்கை மூலம் கைதான இருவரிடம் இருந்தும் 8 கைபேசி கள், 18 சிம் கார்ட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்கள் புத்தளம் பாலாவியை சேர்ந்த 25 மற்றும் 26 வயதுடையவர்களாவர். சந்தேகநபர்களை 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க புத்தளம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## அந்த 7 நாட்கள் மப்புக்கு ஆப்பு!

பொசன் போயா உற்சவங்களை முன்னிட்டு, இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 11ஆம் திகதிவரை ஏழு நாட்களுக்கு சகல மதுபா- னசாலைகளும் மூடப்பட்டிருக்கும் என்று கலால்வரி திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தச் அறிவிப்பு நாடெங்கி லும் உள்ள குடிமகன்களை அதிர்ச்சி யடைய வைத்தாலும், அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய இரண்டு மாவட்டங்களிலேயே இந்த உத்தரவு நடைமுறையில் இருக்கும் என்ற விளக்கம் கொஞ்சம் ஆறுதலடைய வைக்கும்.

அத்துடன், அந்த ஏழு நாட்க ளும்,விசேட சுற்றிவளைப்பு தேடு தல்களும் முன்னெடுக்கப்படும் என் றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# அகதிகளின் பொருட்கள் அதிகாரிகளால் 'அபேஸ்'

நாட்டில் ஏற்பட்ட மழை, மண்சரிவு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்காக வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களை 'அபேஸ்' செய்த இரண்டு கிராம சேவகர்கள் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர். இந்தச் சம்பவம் மாத்தறையில் நடைபெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக வெளிநாடுகளும், தொண்டு நிறுவனங்களும், அரசாங்கமும் நிவாரணப்பொருட்களை தாராளமாக அனுப்பி வருகின்றன. இந்தநிலையில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களுக்காக வந்த பல லட்சம் ரூபா பெறுமதியான நி- வாரணப் பொருட்களை குறித்த இரண்டு கிராமசேவகர்களும் கூட்டாக கையாடியுள்ளனர். இந்தப் பொருட்களை இவர்கள் பதுக்கி வைத்ததால் மக்களுக்கு உரிய நிவாரணப் பொருட்கள் கிடைக்கவில்லை என்று முறைப்பாடு எழுந்தது. இதனை பொலிஸார் விசாரித்தபோதே கிராமசேவகர்களின் கையாடல் தெரியவந்தது.(ஆ)



செலான் வங்கி யாழ்கிளையின் 15 ஆவது வருட நிறைவையொட்டி கைதடி அரச முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு வங்கி ஊழியர்கள் மதிய உணவை நேற்று வழங்கினார்கள். அங்குள்ள சகல முதியோர்களுக்கும் செலான் வங்கி ஊழியர்கள் தாமே உணவைப் பரிமாறி தமது அன்பை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## மகளை வன்புணர்ந்த விரிவுரையாளர் கைது



8 வயது மகளை தொடர்ச்சியாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரளையை சேர்ந்த 43 வயதான நபர் தனது மகளை நீண்டநாள்களாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்துள்ளார். இது குறித்து சிறுமி தாயாருக்கு தெரியப்படுத்தியதன் பேரில் அவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதையடுத்து விரிவுரையாளர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (இ)

## இன்று பிரார்த்தனை

இயற்கை அனர்த்தங்களினால் உயிரிழந்தோரின் ஆத்மா சாந்தி பெறவும், அனைத்து இலங்கை மக்களுக்கும் நாட்டுக்கும் ஆசி வேண்டியும் பிரார்த்தனை நிகழ்வு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இன்று மாலை 6 மணிக்கு ஆரம்ப மாகும்.

ஆயிரம் தேரர்களின் பங்கேற்புடன் இந்தப் பிரார்த்தனை இடம்பெறவுள் ளது. (இ)

# 25,000 பேர்
## தொடர்ந்தும் நலன்புரி முகாம்களில்



வெள்ளம், மண்சரிவால் இடம்பெயர்ந்த சுமார் 25 ஆயிரம் பேர் தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

7 ஆயிரத்து 46 குடும்பங்களைச் சேர்ந்தவர்களே 226 நலன்புரி நிலையங்களில் இவ்வாறு தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உதவிகளை பிரதேச செயலகங்களும் மக்களும் வழங்கி வருகின்றனர். தென்னிலங்கையில் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவால் 224 பேர் உயிரிழந்தது டன் 75 பேர் காணா- மல் போனமை குறிப்பிடத்தக்கது.

# செத்தாலும் போகமாட்டோம்!
## மக்கள் போர்க்கொடி

" மண்சரிவுக்குள் சிக்குண்டாலும் பரவாயில்லை, எமது வாழ்விடப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை வெளியேற மாட்டோம்" என ஹட்டன் சம- னலகம பிரதேசத்தில் வசிக்கின்ற 12 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் கூறியுள்ளனர்.

குறித்த பிரதேசம் கடந்த 5 வருடங்களாக மண்சரிவால் பாதிக்கப்பட்டு வருகிறது. ஆயி- னும் அந்த மக்களுக்கான நிரந்தர வசிப்பிடத்தையோ அல்லது பாதுகாப்பான வசிப்பிடத்துக்கான வாடகையையோ அரசு வழங்கவில்லை. இந்தநிலையில் அங்கு மண்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே அங்குள்ள மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு கோரப்பட்டது. இதன்போதே மண்ணுக்குள் செத்தாலும் பரவாயில்லை. எங்கள் பிரச்சினை தீர்க்கப்படாமல் அகலமாட்டோம் என அந்த மக்கள் போர்க்கொடி தூ க்கி அங்கிருந்து வெளியேற மறுப்புத் தெரிவித்துள்ளனர். (இ)




# சசிகலா -தினகரன் சிறையில் சந்திப்பு

பெங்களூர் சிறையிலிருக்கும் சசிகலாவை சந்திப்பதற்காக இன்று காலை சென்னையிலிருந்து புறப்பட்டார் டி.டி.வி. தினகரன். இரட்டை இலை சின்னத்துக்காக லஞ்சம் வழங்கியதன் பேரில் சிறையிலடைக்கப்பட்ட தினகரன் பிணையில் விடுதலையானார். மீண்டும் கட்சிப் பணிகளில் ஈடுபடுவேன் எனக் கூறியபோதும் கட்சியினர் அவருக்கு ஆதவளிக்கவில்லை. இந்நிலையிலேயே பெங்களூர் சிறையிலிருக்கும் சசிகலாவை சந்தித்து ஆலோசனை நடத்த இன்று அவர் பெங்களூர் சென்றுள்ளார்.

## விமானம் வீழ்ந்து

# நால்வர் பலி!

ஜப்பானின் வடக்கு ஆல்ப்ஸ் மலைப்பகுதியில் நேற்று முன்தினம் சிறிய ரக விமானம் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது. அந்த விமானத்தில் பயணித்த நால்வர் இந்த விபத்தில் பலியாகினர். ஆல்ப்ஸ் மலை பனியால் மூடப்பட்டிருந்ததாலேயே விமானம் விபத்தில் சிக்கியது. விபத்தில் சிக்கியவர்களில் இருவர் விமானம் வீழ்ந்து , சிலமணி நேரங்களின் பின்பெ உயிரிழந்தனர். (இ)

## குழு மோதலில்

# 7 கைதிகள் சாவு

பிரேஸிலில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த இரு குழுக்கள் இடையே கடுமையான மோதல் ஏற்பட்டது. இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் பயங்கரமாகத் தாக்கினர். இந்த மோதலில் 7 இளம் கைதிகள் உயிரிழந்தனர். 2 பேர் படுகாயம் அடைந்தனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. மீட்புப்படையினர் விரைந்து வந்து படுகாயம் அடைந்த 2 கைதிகளை மீட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். (இ)

## இந்திய பெண்கள் படையும்

# இனி போர்க் களத்தில்

போர்க் களங்களில் பெண்கள் படையணியையும் களமிறக்க இந்தியா முடிவெடுத்துள்ளது.
உலக நாடுகள் பலவற்றில் இராணுவத்தில் பெண்கள் சேர்க்கப்படுகின்றனர். ஆனால் பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, கனடா, நோர்வே, ஸ்வீடன், டென்மார்க், பின்லாந்து, இஸ்ரேல் நாடுகளில் மட்டுமே அவர்கள் போர்களில் பங்கேற்கின்றனர்.
இந்திய விமானப் படையில் 3 பெண்கள் கடந்தாண்டு இணைக்கப்பட்டனர். இது குறித்து இந்திய இராணுவத் தளபதி பிபின் ராவத் கூறுகையில் “போர் முனையில் பெண்களை அனுமதிக்கும் நடவடிக்கையை தொடங்கியுள்ளோம். முதலில் இராணுவப் பொலிஸில் பெண்கள் சேர்க்கப்படுவர். அவர்களுக்கான ஒழுக்கவியல் கோட்பாடுகள் வகுக்கப்படுகின்றன. கடற்படையிலும் பெண்களை இணைப்பது தொடர்பிலும் ஆராயப்படுகிறது - என்றார்.

## ஐ.எஸ். தீவிரவாதிகள்

# சொன்னதெல்லாம் பொய்



பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா நகரில் கேளிக்கை விடுதி ஒன்றில் தாக்குதல் நடத்தி 36 பேரைக் கொன்றவர் ஐ.எஸ் அமைப்பைச் சேர்ந்தவரல்லர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சூதாட்டத்தில் தோற்ற 42 வயதான ஜெசி கார்லோஸ் ஜேவியர் என்பவரே தாக்குதலாளி என்று தெரியவந்துள்ளது. இவர் அதே சூதாட்ட விடுதியின் நிரந்தர வாடிக்கையாளர். இவர் ஏற்கனவே பலமுறை இங்கு சூதாடி, ஏராளமான பணத்தை இழந்தவர். அந்த ஆத்திரத்திலேயே அவர் இப்படி வெறியாட்டம் புரிந்ததாகச் சொல்லப்படுகின்றது. இந்தத் தாக்குதலுக்கு முதலில் ஐ.எஸ் அமைப்பு பொறுப்பேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)




இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் கனமழை மற்றும் நிலச்சரிவு காரணமாக 13 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அஸாமின் பிஸ்வநாத், ஜோர்கத், லக்கிம்பூர் ஆகிய மாவட்டங்களில் கடந்த 24 மணி நேரத்தில் கனமழை வெளுத்து வாங்கியது. இதனால் அங்குள்ள 28 கிராமங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால் சுமார் 13 ஆயிரம் பேர் பாதிக்கப் பட்டுள்ளனர். உயிர்ச்சேதங்கள் ஏதும் ஏற்படாத போதும், அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் பொதுமக்கள் தவிக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது. (இ)

# ஆதாயம் தேடும் அமைச்சர்கள் இல்லை!

“சுனாமிப் பேரழிவின்போது வெளிநாட்டு உதவிகளில் ஆதாயங்களைத் தேடி, தமது பொக்கெற்றுகளை நிரப்பிய அமைச்சர்களைப் போன்று, இன்றைய அரசாங்கத்தில் அமைச்சர்கள் எவரும் இல்லை” இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.
“வெள்ளத்தினாலும், மண்சரிவினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, இதுவரையும் எந்த உதவியையும் மகிந்த தரப்பினர் வழங்கவில்லை. ஆனால், சுனாமியின்போது மக்களுக்கு 24 மணித்தியாலங்களுக்குள் மின்சாரத்தை பெற்றுக் கொடுத்தோம் என்கின்றனர். சுனாமியின்போது, நீரானது மீண்டும் கடலுக்கே சென்றுவிட்டது. ஆனால், அவ்வாறான நிலைமை இன்றில்லை. ஆகையால், யோசித்துப் பேச வேண்டும் “ எனவும் அவர் கூறினார். (இ)




வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களது பாவனைக்கென 7லட்சம் ரூபா பெறுமதியான தண்ணீர் போத்தல்களை இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் யாழ்.மாவட்டப் பணிப்பாளரும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற செயலாளரும் சமூக சேவையாளரும் பிரபல வர்த்தகருமான கலாநிதி வைத்திலிங்கம் சிவராசா, காலி மாவட்ட அரசாங்க அதிபர் கொடிகாரவிடம் கடந்த வியாழக்கிழமை கையளித்தார்.

## கப்பல் வாகனத்தில் கந்தன்



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சுழிபுரம் பறாளாய் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. 7ஆம் திருவிழாவான நேற்று முருகப்பெருமான் கப்பல் வாகனத்தில் உலா வந்தார்.

# தம்புள்ளவைக் கலக்கிய யாழ்ப்பாணத்து பூசணி



28 கிலோ எடையுடைய இராட்சத யாழ்ப்பாணத்து பூசணிக்காய் தம்புள்ளவில் பலரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது. தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பூசணிக்காய்கள் விற்பனைக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. சந்தையில் ஒரு கிலோ கிராம் பூசணிக்காய் 110 முதல் 120 ரூபாய் விலையில் விற்பனையாகின்றது.இந்த நிலையிலேயே அங்கு யாழிலி இருந்து அனுப்பப்பட்ட இராட்சத பூசணிக்காய் பலரையும் போட்டி போட்டு வாங்க வைத்துள்ளது. அந்தப் பூசணியின் நிறை 28 கிலோ 100 கிராம் . இந்த பூசணிக்காய் 3160 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.(இ)

# பிளாஸ்ரிக் அரிசி இலங்கையிலும்!

இலங்கையில் பிளாஸ்ரிக் அரிசி விற்பனை செய்யப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.
இலங்கையிலுள்ள சதொச விற்பனை நிலையங்களிலேயே இந்தப் பிளாஸ்டிக் அரிசி விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.
இலங்கையில் நிலவிய கடும் வறட்சி நிலையை அடுத்து, வெளிநாடுகள் வழங்கிய நிவாரணப் பொருட்களிலேயே இந்தப் பிளாஸ்ரிக் அரிசி கலந்து கொண்டுவரப் பட்டுள்ளது. இந்த அரிசியில் சோறு சமைத்தால் எத்தனை நாட்களானாலும் அது கெட்டுப்போகாமல் இருக்கும். அத்தோடு பிளாஸ்ரிக் அரிசிச் சோற்றை உருண்டையாக்கி, நிலத்தில் வீசினால் அது பந்து போல துள்ளிக் குதிக்கும் வீடியோக் காட்சிகள் சமூக வலைத் தளங்களிலும் பகிரப்பட்டு வருகின்றன. (இ)

## அனைத்து பல்கலைக்கழகங்களின் கிரிக்கெட்:
# அரையிறுதியில் யாழ். பல்கலைக்கழகம்



மொரட்டுவ பல்கலைக்கழகத்தை 5 விக்கெட்களால் வெற்றி கொண்ட யாழ். பல்கலைக்கழகம் அரையிறுதிக்கு முன்னேறியது.

அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று நடந்த போட்டியில் யாழ்ப்பாணம், மொரட்டுவ பல்கலைக்கழகங்கள் மோதின. மழை காரணமாக போட்டி 33 ஓவர்களாக குறைக்கப்பட்டது. நாணயச் சுழற்சியில் வென்ற யாழ். பல்கலைக்கழகம் முதலில் களத் தடுப்பில் ஈடுபட்டது.

துடுப்பெடுத்தாடிய மொரட்டுவ பல்கலைக்கழக அணி 33 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 28 ஓவர்களில் 5 விக்கெட்களை மாத்திரம் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கோகுலன் 44 ஓட்டங்களையும், துவாரகசீலன் 47 (ஆட்டமிழக்காமல்) ஓட்டங்களையும் பெற்றனர். வெற்றி பெற்ற யாழ். பல்கலைக்கழகம் அரையிறுதியில் ராஜரட்டைப் பல்கலைக்கழகத்தை எதிர்கொள்ளவுள்ளது.

### சம்பியன்ஸ் கிண்ணஅணிகளின் நிலை

| அணி | போ | வெ | தோ | ச | மு.அ | பு |
|---|---|---|---|---|---|---|
| ‘ஏ’ | | | | | | |
| இங்கிலாந்து | 1 | 1 | 0 | 0 | 0 | 2 |
| அவுஸ்திரேலியா | 1 | 0 | 0 | 0 | 1 | 1 |
| நியூஸிலாந்து | 1 | 0 | 0 | 0 | 1 | 1 |
| பங்களாதேஷ் | 1 | 0 | 1 | 0 | 0 | 0 |
| ‘பி’ | | | | | | |
| இந்தியா | 1 | 1 | 0 | 0 | 0 | 2 |
| தெ.ஆபிரிக்கா | 1 | 1 | 0 | 0 | 0 | 2 |
| இலங்கை | 1 | 0 | 1 | 0 | 0 | 0 |
| பாகிஸ்தான் | 1 | 0 | 1 | 0 | 0 | 0 |

குறிப்பு: போ : போட்டி வெ : வெற்றி தோ : தோல்வி ச : சமன் மு.அ. : முடிவற்றது பு : புள்ளி

### சம்பியன்ஸ் கிண்ண நேற்றைய ஆட்ட முடிவு

இந்தியா 124 ஓட்டங்களால் வெற்றி (டக்வோர்த் லூவிஸ்)

இந்தியா: 319/3 (48) பாகிஸ்தான் 164 (33.4)

(மழை காரணமாக இந்தியாவுக்கு 48 ஓவர்களாகவும் பின்னர் பாகிஸ்தானுக்கு 41 ஓவர்களில் 289 ஓட்டங்கள் வெற்றியிலக்காகவும் நிர்ணயிக்கப்பட்டது.)



நேற்று இந்தியா – பாகிஸ்தான் போட்டி நடைபெற்ற மைதானத்தில் ‘கிரிக்கெட் கடவுள்’ எனப் போற்றப்படும் சச்சின் டெண்டுல்கருடன் நடிகர் தனுஷ் சந்திப்பு...

# சூடு பிடிக்கிறது பிரெஞ் ஓபன்

பிரெஞ் ஓபன் டென்னிஸ் தற்போது சூடுபிடித்துள்ள நிலையில் முக்கிய நட்சத்திரங்கள் சிலர் முன்னேறிச் செல்ல சிலர் வீழ்த்தப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த 4ஆவது சுற்றில் ‘களிமண்தரையின் நாயகன்’ ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் 6-1, 6-2, 6-2 என்ற சுற்றுக் கணக்கில் சக நாட்டவரான ரோபர்ட்டா பாவ்டிஸ்டா அகுத்தை துவம்சம் செய்து காலிறுதிக்குள் அடியெடுத்து வைத்தார்.



மற்றொரு ஆட்டத்தில் இரண்டாம் நிலை வீரரான செர்பியாவின் நோவாக் ஜோகோவிக் 7-6, 6-1, 6-3 என்ற சுற்றுக் கணக்கில் ஸ்பெய்னின் அல்பேர்ட் ரமோஸை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்றில் கரோலினா வொஸ்னியாக்கி (டென்மார்க்), முன்னாள் சம்பியன் குஸ்னெட் சோவாவை (ரஷ்யா) விரட்டி காலிறுதியை உறுதி செய்தார்.

நடப்புச் சம்பியன் கார்பின் முகுருஜா, கிறிஸ்டினா மிலாடெனோவிச்சிடமும் (பிரான்ஸ்), அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் சுவிட்ஸர்லாந்தின் டைமியா பாக்சின்ஸ்கியிடமும் வீழ்ந்தனர்.(ஐ)

## டிஜிட்டலில் ‘ஆளவந்தான்’



உலகநாயகன் கமல்ஹாசன் நடிப்பில் கடந்த 2001இல் வெளியான படம் ‘ஆளவந்தான்’.

தற்போது இப்படத்தை டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் மாற்றியமைத்து மீண்டும் வெளியிட படத்தின் தயாரிப்பாளரான தாணு முடிவு செய்திருக்கிறார். மேலும் நீளம் கருதி குறைக்கப்பட்ட சண்டைக் காட்சிகளும் இணைக்கப்படுவதுடன், சுமார் 500 திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. (ஒ)


## ‘காலா’வில் மம்முட்டி?



அம்பேத்கர் வாழ்க்கை பற்றிய சில காட்சிகள் ரஜினியின் ‘காலா’ படத்தில் இடம் பெறவிருப்பதால், இதில் அம்பேத்கர் வேடத்தில் நடிக்க மம்முட்டியிடம் பேச்சு நடந்து வருகிறது எனக் கூறப்படுகிறது.

மம்முட்டி 2000ஆம் ஆண்டு வெளியான அம்பேத்கர் வாழ்க்கை கதை படத்தில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## பேஸ்புக்கில் புதிய வசதி



பேஸ்புக்கில் தொலைபேசி வழியாகப் பதிவு செய்யும் வீடியோக்களை நேரடியாக ஒளிபரப்பும் வசதியே இதுவரை இருந்தது. இதனை தற்போது கணினிகளின் மூலமும் பயன்படுத்தக்கூடிய வகையில் மாற்றியமைக்கப் பட்டுள்ளது.

இந்தத் தகவலானது நேற்றுமுன்தினம் பேஸ்புக் நிறுவன வலைப்பதிவொன்றின் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த வசதியானது ‘வீளாக்கிங்’ என்று அழைக்கப்படும் வீடியோ ப்ளாக்கிங் செய்பவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)



## பிரபல இயக்குநருடன் இணையும் உதயநிதி

உதயநிதி ஸ்டாலின் அடுத்தடுத்து தன்னுடைய படங்களில் வித்தியாசம் காட்ட வேண்டும் என்று படங்களைத் தேர்வு செய்து வருகிறார்.

இந்நிலையில் தேசிய விருது என பல விருதுகளை வாங்கிய இயக்குநர் பிரியதர்ஷன் இயக்கத்தில் உதயநிதி நடிக்கவிருக்கிறார்.

இந்தத் தகவலை அவரே தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். (ஒ)

## அரியாலை சரஸ்வதி ச.ச. நிலைய கிரிக்கெட்:
# அரையிறுதி அணிகள் தயார்









அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, அமரர்களான சுப்பிரமணியம், கௌசிகன், இதயராஜ் ஆகியோரின் ஞாபகார்த்தமாக “யாழின் கிரிக்கெட் இளவரசன் யார்” கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்றுமுன்தினம் மற்றும் நேற்று நடைபெற்ற போட்டிகளின் அடிப்படையில் கரவெட்டி ஸ்பேஸ், இணுவில் கலைஒளி, மல்லாகம் ஸ்ரீமுருகன், குருநகர் கார்மேல் போய்ஸ் அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளன.

அதேவேளை, அரியாலைக்குட்பட்ட அணிகளுக்கான அரையிறுதிப் போட்டிகளில் அரியாலை சனசமூக நிலைய அணியை வீழ்த்தி அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணியும், அரியாலை அருணோதயா சன சமூக நிலைய அணியை வீழ்த்தி அரியாலை திருமகள் சன சமூக நிலைய அணியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. (ஐ)


# இங்கும் செய்யலாமே..!



தென்னிலங்கையில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ரெலோ அமைப்பினர் சென்று உதவிகளை வழங்கினர். இதன்போது காலியின் பத்தேகம பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கட்டட இடிபாடுகளை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தூக்கி அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டார். (உபரித் தகவல்: காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டம் கிளிநொச்சியில் 107 ஆவது நாளாகவும், வவுனியாவில் 102 ஆவது நாளாகவும் தொடர்ந்து நடைபெறுகின்றது.)

### ஞாயிறு வருவார்

# ரணில்



“மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதற்காக, அமெரிக்கா சென்றுள்ள ரணில்விக்கிரமசிங்கவின் உடல் நிலை, தற்போது முன்னேற்றமடைந்துள்ளது. எனவே அவர் திட்டமிட்டமைக்கு முன்னதாகவே, அதாவது எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமையே இலங்கைக்குத் திரும்புவார்” என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜயமஹா, தெரிவித்தார்.(இ)

# இன்றைய கருத்தோவியம்




நன்றி: அத தெரண

# 579 சதுர கிலோமீற்றரில் இன்னும் கண்ணிகள்!



கிளிநொச்சி மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட 579 சதுரகிலோ மீற்றர் பரப்பளவில் இன்னும் கண்ணிவெடிகளை அகற்ற வேண்டியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பகுதிகளில் தற்போது வெடிபொருள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 579 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் வெடிப் பொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கிளாலி, முகமாலை, இத்தாவில் போன்ற பகுதிகளில் 7.6 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணி வெடிகள் அகற்ற வேண்டியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# மீண்டும் போராட்டம்

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி (சைட்டம்) விவகாரம் உட்பட மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை அரச வைத்தியர் சங்கம் அடுத்த வாரம் மீண்டும் போராட்டமொன்றில் ஈடுபடவுள்ளது.

“முன்னைய போராட்டங்களைப் போலவே இம்முறையும் பல்வேறு தொழிற்சங்கங்களும் சிவில் அமைப்புகளும் எங்கள் போராட்டத்துக்கு ஆதரவு தரவுள்ளன.அதற்கான பேச்சுகள் இப்போது நடைபெற்று வருகின்றன” என அச்சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# கொழும்பு துறைமுகநகர் 40% பணிகள் நிறைவு

“கொழும்பு துறைமுக நகரத்தை உருவாக்குவதற்கான 40 வீத பணிகள் முடிவடைந்துள்ளன. அத்துடன் துறைமுகநகரை கொழும்புடன் இணைக்க மூன்று வகையான மார்க்கங்கள் அமைக்கப்படவுள்ளன” என்று சீன நிறுவன அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

“1.5 பில்லியன் டொலர் செலவில் சீன நிறுவனத்தினால் கொழும்புத் துறைமுக நகரம் அமைக்கப்படுகின்றது. இதனைக்கொழும்புடன் இணைப்பதற்காக நெடுஞ்சாலை, சுரங்கப் பாதைகள், மற்றும் தொடருந்துப் பாதை என்பன அமைக்கப்படவுள்ளன.

25, 30 ஆண்டுகளில் துறைமுக நகரில் பகல் நேர சனத்தொகை 2.5 இலட்சமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களில், 75 ஆயிரம் பேர் அங்கு வசிப்போராக இருப்பர். துறைமுக நகரில் 21 ஆயிரம் அடுக்குமாடிக் குடியிருப்புகளும் அமைக்கப்படவுள்ளன” என்றும் அவர் தெரிவித்தார்.(இ)

# சதுரங்க வேட்டை



இலங்கை பாடசாலைச் சதுரங்கச் சங்கத்தால் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட சதுரங்கச் சுற்றுப்போட்டி யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலையில் கடந்த 3ஆம், 4 ஆம் திகதி களில் நடைபெற்றது. (இ)

### மோ.சைக்கிள் மோதி

# முதியவர் சாவு

தெஹிவளை - பம்பலபிட்டிய பிரதான வீதியில் விவே கானந்த சந்திக்கு அருகில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் பலியானார்.

நடந்து சென்ற 69 வயதான முதியவர் மீது மோட்டார் சைக்கிள் ஒன்று மோதிய தாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாய மடைந்தவர், களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். (இ)

## யாழ்.இந்துக் கல்லூரி சாரணர் குழுவின் உலக சுற்றுச்சூழல் தினம்





யாழ்.இந்துக் கல்லூரி சாரணர் குழுவின் உலக சுற்றுச்சூழல் தினம் யாழ். இந்துக் கல்லூரியின் கணினி விரிவுரை மண்டபத்தில் இன்று காலை நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக விவசாயபீட உயிரியல்துறைத் தலைவர் கலாநிதி திருக்குமரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.மரக் கன்றுகளும் இதன் போது வழங்கப்பட்டன. (எ)

### வீட்டுப்பாடம் செய்யாததால்

# கைவிரல்கள் முறிந்தன!



வீட்டுப்பாடம் செய்யாமல் வந்த மாணவனின் கை விரல்களை முறித்த இளம் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜாஎல பிரதேசத்தை சேர்ந்த தரம் 5 மாணவனையே இவ்வாறு பிரம்பாலும், பலகையாலும் ஆசிரியர் தாக்கியுள்ளார். இத்தாக்குதலில் மாணவனின் கைவிரல்கள் முறிந்ததால் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ)

## நாளை நாளும் கோளும்

06.06.2017 செவ்வாய்க்கிழமை ஏவிளம்பி வருடம் வைகாசி மாதம் 23ஆம் நாள்

துவாதசி பி.ப. 01.39 வரை சுவாதி மு.இ. 10.13 வரை சித்தயோகம்

இராகுகாலம் 02.52-04.22 சுபநேரம் 10.22-11.52 எமகண்டம் 08.52-10.22

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெற்றி | நன்மை | இலாபம் | செலவு | வரவு | சுகம் | சுபம் | பெருமை | மேன்மை | நலம் | நட்பு | சாந்தம் |

எதிரொலி Ethiroli



# பிளாஸ்ரிக் அரிசி



## மறுக்கிறது வர்த்தக அமைச்சு


சதொசவில் விற்பனையாகும் அரிசியில் பிளாஸ்ரிக் அரிசி கலந்துள்ளதாக யூ-ரியூப் இணையத்தில் வெளியிடப்பட்ட வீடியோ உண்மைக்குப் புறம்பானது என வர்த்தக மற்றும் லங்கா சதொச அமைச்சு தெரிவித்துள்ளது.

புறக்கோட்டையில் உள்ள சதொச நிலையத்தில் விற்கப்பட்ட பாசுமதி அரிசியில் பிளாஸ்ரிக் அரிசி கலந்துள்ளதாக வெளியான தகவல் உண்மைக்குப் புறம்பானது. சமைக்கப்பட்ட பாசுமதி அரிசி 24 மணி நேரத்துக்கும் மேலாக பழுதடையாது. மேலும் சமைக்கப்பட்ட பாசுமதி அரிசியை உருண்டையாக்கினால் சிதைவடையாது. அது நிலத்தில் போடப்பட்டாலும் சிதையாது.

கடந்த மே 15 ஆம் திகதியே பாகிஸ்தானிடம் இருந்து 20 மெட்ரிக் தொன் பாசுமதி அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. சீனாவிடம் இருந்து அல்லவென்றும் வர்த்தக மற்றும் சதொச அமைச்சு தெரிவித்துள்ளது.

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## அந்த நாள் ஞாபகம்.....!



### 1974.06.05

தமிழ் மக்களின் விடுதலையை நேசித்த போராளியான சிவகுமாரன் உரும்பிராயில் பொலிஸார் சுற்றி வளைத்த போது சயனைட் அருந்தி உயிர் துறந்தார். இவரே ஈழப் போரில் முதன் முதலில் சயனைட் அருந்தி வீரச்சாவை தழுவியவர்.

பொதுத் தேர்தல் எதிரொலி

## பிரிட்டன் பிரதமர் தெரேஸா இந்து ஆலயத்தில் வழிபாடு



பிரிட்டன் பிரதமர் தெரேஸா மே தனது கணவர் பிலிப்புடன் வடமேற்கு லண்டன் சுவாமி நாரயணன் கோவிலுக்கு சென்று வழிபாடாற்றினார்.

பிரிட்டனில் வரும் 8 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடக்கவுள்ளது. இதற்காக இறையாசி வேண்டி நாராயணன் கோவிலில் மலர் அர்ச்சனை செய்து சிறப்பு வழிபாடாற்றினார்.

பின்னர் அங்கு குழுமியிருந்த பக்தர்களின் மத்தியில் பேசிய அவர் "உலகிலேயே சிறந்த நாடாக பிரிட்டன் உருவாக வேண்டும். அதற்கு இந்துக்கள் அனைவரும் என்னுடன் ஒன்றிணைய வேண்டும்" - என்றார்.

பிரிட்டனில் புலம்பெயர்ந்து வாழும் ஈழ, இந்தியர்கள் இந்து மதத்தையே பின்பற்றுகின்றனர். வாக்குரிமை பெற்றுள்ள இவர்கள் தேர்தலில் முக்கிய செல்வாக்கு செலுத்துகின்றனர். இந்துக் கடவுளர் மீது பக்தி செலுத்தும் தெரேஸா மே முக்கிய தருணங்களின் போது இந்து ஆலயங்களுக்கு செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இறுதிக்குத் தகுதி

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் 19 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் கழகமும் அண்ணா சிலையடி இளைஞர் கழகமும் தகுதி பெற்றுள்ளன.

### போராளிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவான ஜனநாயக போராளிகளாக நாங்கள் உங்கள் முன் வந்துநிற்கின்றோம்.

அச்சமின்றி அனைத்துப் போராளிகளும் ஜனநாயகப் போராளிகளாக மீண்டும் எமது சேவையை இலங்கை அரசின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு மக்களுக்கு வழங்குவோம்.

எம் தலைவன் மீது நம்பிக்கையும் பற்றும் கொண்ட எம்மக்கள் அனைவரும் எம்முடனும் கைகோர்க்கும்படி கேட்டு நிற்கின்றோம்."- என அந்தத் துண்டுப்பிரசுத்தில் கோரப்பட்டுள்ளது.( அ-44)

### அமைச்சருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் இடம்பெற்றிருந்த குறித்த பேஸ்புக் பதிவில், அந்த வாழைப்பழப்பொதியில், அமைச்சரின் கைத்தொலைபேசி இலக்கம் மற்றும் காலியிலுள்ள அவரின் இல்லத்தின் இலக்கம் என்பன இடம் பெற்றிருந்தாகவும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. (ஆ)

### கருத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவ கார அமைச்சர் வஜிர அபேவர்த்தன இன்று மறுத்துள்ளார். அத்துடன் ஆறுகளில் திட்டமிடாது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளே காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

"அமைச்சர் சம்பிக்க கூறுவது முற்றிலும் ஆதாரமற்ற தகவலாகும். எது எப்படியிருப்பினும் இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புக்கள் எதிர்காலத்தில் ஏற்படக்கூடாது" - என்றார்.

## சுசந்திகாவின் முடிவில் உள்நோக்கமே






ஒலிம்பிக் பதக்கத்தை ஏலம் விடப்போகிறார் என சுசந்திகா தெரிவித்த கருத்தில் உள்நோக்கம் உள்ளது எனக் கூறுகிறார் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர.

சுசந்திகாவுக்கு விளையாட்டு அமைச்சகத்தில் 75 ஆயிரம் ரூபா சம்பளத்துடன் ஆலோசகர் பதவியை வழங்க முயன்றேன். ஆனால் அவருக்கு 60 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கவே அமைச்சரவை அங்கீகரித்தது. ஆனால் அதைப் பெற்றுக் கொள்ள அவர் முன்வரவில்லை.

எது எப்படியிருப்பினும் அவர் தனது ஒலிம்பிக் பதக்கத்தை விற்பனை செய்ய வேண்டி வராது என்றும் அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

## லண்டன் தாக்குதல்: பன்னிருவர் கைது



லண்டன் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 12 பேர் கைது சய்யப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு லண்டன் பாலத்தில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 7 பேர் பலியாகினர். 48 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் மூவரை கிழக்கு லண்டனில் பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து அடுக்குமாடிக் கட்டடம் ஒன்றில் சோதனை நடத்தப்பட்டது. அங்கு வைத்தே ஏனையோர் கைது செய்யப்பட்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். பயங்கரவாதிகள் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வட மாகாண

## கபடிச் சம்பியன்கள்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் இன்று நடைபெற்ற கபடிப் போட்டிகளில் 20 வயது ஆண்கள் பிரிவில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியும், 17 வயதுப் பெண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரியும் சம்பியன் பட்டங்களை வென்றன.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கபடிப் போட்டிகள் ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை நடைபெற்றன.

இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி 42-22 என்ற புள்ளிகள் அடிப்படையில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியையும், நெல்லியடி மத்திய கல்லூரி, 28-22 என்ற புள்ளிகள் அடிப்படையில் கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையையும் வீழ்த்தின.


மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848


## அரபு ஒன்றியத்தில் கட்டார் 'அவுட்'!

அரபு நாடுகளின் ஒன்றியத்தில் இருந்து கட்டார் விலக்கப்படும் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மைய நாட்களாக அரபு நாடுகளில் இடம்பெற்று வரும் பயங்கரவாதத் தாக்குதல் சம்பவங்களுக்கு கட்டார் துணை போவதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பில் பல நாடுகள் கவனம் செலுத்திவந்தன. இந்த நிலையில் கட்டாரை அரபு ஒன்றியத்தில் இருந்து நீக்க சக நாடுகள் முடிவு செய்துள்ளன.

இந்த முடிவின் பிரகாரம் கட்டாருடன் வர்த்தக உறவுகளை துண்டிக்கவும் , பொருளாதார தடைகளை ஏற்படுத்தவும் அரபு ஒன்றியத்தின் நாடுகள் தீர்மானம் செய்துள்ளன. (ஆ)


விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

'எதிரொலி' மாலைத் தினசரிக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை



வேலை நேரம்: மாலை 4 மணி முதல் மாலை 6.30 வரை (இரண்டரை மணித்தியாலங்கள்)

வேதனம்: 15,000 + ஊக்கப்படி

தொடர்புக்கு: 021 300 4848, 077 657 5907 ethirolimedia@gmail.com


இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 05.06.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.